பட்டணம்காத்தான் முதல்நிலை ஊராட்சி தனி அலுவலரின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. போ.ஜெயமுருகன் எம்.ஏ.,

ந.க.எண்:05/ப.கா.ஊ-I/2025 **நாள்: 22 .11.2025**

பொருள்: தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் - இராமநாதபுரம் வீட்டு வசதிப் பிரிவு - இராமநாதபுரம் பட்டணம்காத்தான் மனை மேம்பாட்டுத் திட்டம் - அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் எதிர்கால உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் - தற்சமயம் மனைகளாக பிரிக்கப்பட்டநகர் ஊரமைப்புத்துறை மூலம் வரைபட ஒப்புதல் பெறப்பட்டது - இறுதிஒப்புதல் பெறுவதற்காக வரைபட ஒப்புதல் கட்டணம் மற்றும் மனை ஒப்புதல் கட்டணம் ரூ.21,40,414/- தொகை செலுத்தப்பட்டது - இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் -தொடர்பாக.

பார்வை:

1. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்:9084/2018/சிம-2நாள்:21.01.2020.

2. தனி அலுவலர் / பட்டணம்காத்தான் முதல்நிலை ஊராட்சி அவர்களின் கடித எண்:ந.க06/ப.கா.ஊ-1/2025 நாள்:10.11.2025.

3. அரசாணை எண்:180, ஊரக வளர்ச்சி மற்றம் ஊராட்சி துறை, (PR-II(2)) நாள்:05.12.2024.

4. அரசாணை எண்:79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்:04.05.2017.

5. செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் (பொ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், இராமநாதபுரம் அவர்களின் கடிதம் எண்:LA/2560/85 நாள்:19.08.2025.

6. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்:06/ப.கா.ஊ-1/2025 நாள்: 03.09.2025.

7. செயற்பொறியாளர், மற்றும் நிர்வாக அலுவலர், தமிழ்நாடு, வீட்டு வசதி வாரியம், இராமநாதபுரம் அவர்கள் கடிதம்: 1A/2560/85 நாள்: 07.11.2025.

உத்தரவு:-

இராமநாதபுரம் மாவட்டம், பட்டணம்காத்தான் கிராமம் புல எண்: 42/1 பகுதி மற்றும் பல 102.81 ஏக்கர் பரப்பளவு நிலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் திட்டம் செயல்படுத்துவதற்காக கையகப்படுத்தப்பட்டு, இதில் வாரியம் வசம் ஒப்படைக்கப்பட்ட 82.43 ஏக்கர் நிலத்தில் மனை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த மனை வரைபடம் நகர் ஊரமைப்புத்துறை LP/DTCP NO: 90/2004-ல் ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்தில் எதிர்கால உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்ட இடங்கள், மனைகளாக பிரிக்கப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களிடம் பார்வை 1-ல் காணும் கடிதம் வாயிலாக திருத்திய வரைபட ஒப்புதல் LP/DTCPNO:3/2020) பெறப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு குழுமத்திடம் ஒப்புதல் பெறப்பட்ட திட்ட வரைபடம் உள்ளாட்சி அமைப்பிடம் இறுதி ஒப்புதல் பெறவதற்காக, உள்ளாட்சி துறையால் பார்வை 2-ல் காணும் கடிதம் வாயிலாக வரைபட ஒப்புதல் கட்டணம் மற்றும் மனை ஒப்புதல் கட்டணம் ரூ.21,40,414/- செலுத்த கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் ரூ.21,40,414/- (VR.NO:213 CHEQUE NO: 006072 DATE: 20.112025.UTR NO:UB2NH25324239665) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் பட்டணம்காத்தான் ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

எனவே மேற்படி திட்டத்திற்காக நகர் ஊரமைப்பு குழுமத்திடம் ஒப்புதல் பெறப்பட்ட மனைவரைபடத்திற்கு (LP/DTCP NO:3/2020) கீழ்கண்ட மனையிடங்களை மட்டும் மனையிட வரன்முறை இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

SI.NO	PLOT TYPE	PLOT NO.	NO.FOF PLOTS	S.F.NO.
1	C	1 to 283	138	42/1,3,5A3,6 43/3 44/1,2,5A,5B 329/4,5 331/3A,3B,3C,4A,4B,7, 332/4,7 342/2,3B 343/2,3,4A1,4A2,4A3
2			81	56/3,4,5,6
3			21	60/1
4			36	57/1B,3,4,5,6
5			7	69/4
6	B	615 to 621	7	42/1,6 44/5B
7	Shops	1 to 3	3	331/5B 332/10B,10C
		Total	**293**	

22/11/2025

தனி அலுவலர்
பட்டணம்காத்தான் முதல்நிலை ஊராட்சி
மண்டபம் ஊராட்சி ஒன்றியம்
இராமநாதபுரம் மாவட்டம்.

பெறுநர்
செயற்பொறியாளர் மற்றும்
நிர்வாக அலுவலர்
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்
இராமநாதபுரம் வீட்டு வசதிப் பிரிவு
இராமநாதபுரம் மாவட்டம்.